**ஜூன் – 12**

# TNPSC துளிகள்

- தமிழ்நாட்டின் ஆளும் கட்சியான திமுகவின் மூன்று வேட்பாளர்கள் உட்பட நடிகரும் அரசியல்வாதியுமான கமல்ஹாசன் மற்றும் ஐந்து பேர் மாநிலங்களவைக்குப் போட்டி இன்றி தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர்.
- சென்னை தரமணியில் உலக வங்கிக் குழுவின் (WBG) மிகவும் நவீனமயமாக்கப்பட்ட உலகளாவிய வணிக மையத்தை (GBC) தமிழக முதல்வர் மற்றும் பிற உலக வங்கி அதிகாரிகளுடன் இணைந்து திறந்து வைத்தனர்.
- இந்திய விமானப்படையின் குழுத் தலைவர் சுபான்ஷு சுக்லா, 40 ஆண்டுகளுக்கும் மேலாக விண்வெளிக்குச் சென்று சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு (ISS) செல்லும் முதல் இந்தியர் என்ற பெருமையினைப் பெற உள்ளார்.
- இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் ஆனது, இந்தியாவில் உள்கட்டமைப்பினை மேம்படுத்துவதற்கான மதிப்பை வெளிக்கொணரச் செய்வதற்கும், பொது-தனியார் பங்களிப்பை அதிகரிப்பதற்கும் வேண்டி சொத்துக்களைப் பணமாக்குவதற்கான அதன் உத்தியை முதன்முறையாக குறிப்பிட்டுக் காட்டியுள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## இணையத் தொழிலாளர்களுக்கான ஓய்வறைக் கூடம்




- முதல் கட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியினால் (GCC) தற்போது கட்டப்பட்டு உள்ள இணையத் தொழிலாளர்களுக்கான ஓய்வறைகள் அண்ணா நகர் மற்றும் K.K. நகரில் திறக்கப் பட்டுள்ளன.
- ஒருங்கிணைந்தக் கட்டளை வழியிலான கட்டுப்பாட்டு மையம் மூலமாக நிகழ்நேரக் கண்காணிப்பு மூலம் ஓய்வறைகளை கண்காணிக்க மாநகராட்சி திட்டமிட்டுள்ளது.
- உணவு விநியோகம் மற்றும் இணைய வணிக விநியோகப் பணிகளில் ஈடுபட்டுள்ள இணையத் தொழிலாளர்கள் இந்த வசதிகளை இலவசமாகப் பயன்படுத்த வேண்டி அனுமதிக்கப் படுவார்கள்.

- ஒவ்வொரு ஒய்வறையிலும் 25 தொழிலாளர்கள் அமர முடியும்.

### RTE குறித்து சென்னை உயர் நீதிமன்றத் தீர்ப்பு 2025




- கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ் தனியார் பள்ளிகளில் மாணவர்களைச் சேர்க்கத் தேவையான நிதியை உடனடியாக தமிழக அரசுக்கு ஒதுக்குமாறு சென்னை உயர் நீதிமன்றம் மத்திய அரசுக்கு உத்தரவிட்டது.
- 2021 முதல் 2023 ஆம் ஆண்டு வரையில் மத்திய அரசு அதற்கான நிதியினை ஒதுக்க வில்லை.
- நமது மாநில அரசானது புதிய கல்விக் கொள்கையை செயல்படுத்துவது தொடர்பாக மத்திய அரசுடனான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடாததால், கல்விக் கட்டண நிதி ஒதுக்கப்படவில்லை என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- RTE சட்டத்தின் கீழ், ஏழை மாணவர்களுக்கான 25 சதவீத இடஒதுக்கீட்டிற்கான கல்விக் கட்டணம் மத்திய அரசால் செலுத்தப்படும்.
- RTE சட்டத்தின் கீழ் உள்ள சமக்ர சிக்சா திட்டம் ஆனது உண்மையில் 2020 ஆம் ஆண்டு புதிய கல்விக் கொள்கையைச் செயல்படுத்துவதைப் போன்றது என்றும், ஆனால் RTE சட்டத்தின் கீழ் உள்ள கடமைகள் தனிப்பட்டவை என்றும் நீதிமன்றம் கூறியது.
- 2024-25 ஆம் நிதியாண்டில், இந்த சமக்ர சிக்சா திட்டத்தின் கீழ் மாநில மற்றும் மத்திய அரசுகள் ஆகியவற்றினால் 3,586 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட இருந்தது.
- இதில், மத்திய அரசின் பங்கு 2,151 கோடி ரூபாயாகும்.

## சர்வதேசச் செய்திகள்

### ICDRI 2025


- பேரிடர் தாங்கும் உள்கட்டமைப்பு (ICDRI) குறித்த ஏழாவது சர்வதேச மாநாடானது பிரான்சின் நைஸ் நகரில் நடைபெற்றது.
- இந்த நிகழ்வின் கருப்பொருள் "Shaping a Resilient Future for Coastal Regions" என்பதாகும்.
- இந்த மாநாடானது புது டெல்லியைத் தலைமையிடமாகக் கொண்ட பேரிடர் தாங்கும் உள் கட்டமைப்புக்கான கூட்டணியால் (CDRI) ஏற்பாடு செய்யப்பட்டது.
- CDRI ஆனது இணைத் தலைமையாகக் கொண்டு, ஐரோப்பாவில் இந்த மாநாடு நடத்தப் படுவது இதுவே முதல் முறையாகும்.

- 2025 ஆம் ஆண்டு ICDRI ஆனது, ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பேரிடர் அபாயக் குறைப்பு அலுவலகம் (UNDRR) பேரிடர் அபாயக் குறைப்புக்கான உலகளாவிய தளம் (GPDRR) மற்றும் நைஸில் நடைபெற்ற மூன்றாவது ஐக்கிய நாடுகள் பெருங்கடல் மாநாடு (UNOC3) ஆகியவற்றுடன் ஒருங்கே நடைபெற்றது.
- இந்த நிகழ்வின் போது, இந்தியப் பிரதமர் அவர்கள் பேரிடர் நெகிழ் திறனை நன்கு வலுப்படுத்துவதற்கான 7 முக்கிய உலகளாவிய முன்னுரிமைகள், முன் எச்சரிக்கை அமைப்புகள் மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கையின் தேவை ஆகியவற்றை நன்கு குறிப்பிட்டுக் காட்டினார்.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## புரோட்டான் உமிழும் கனமான உட்கரு




- அணுக்கரு இயற்பியலாளர்கள் முதன்முறையாக அஸ்டாடினின் அரிய ஐசோடோப் என்பதின் கதிரியக்கச் சிதைவைக் கண்டறிந்துள்ளனர்.
- அவர்கள் 188Astatine (188At) என்ற கூறின் புரோட்டான் உமிழ்வு மற்றும் அரை ஆயுளை அளவிட்டுள்ளனர்.
- இயற்கையில் காணப்படும் மிகவும் கனமான தனிமம் அறிவியலாளர்கள் கணிக்காத வகையில் அதிக அளவில் மாற்றியமைக்கப்படலாம், அழிக்கவும் படலாம் என்பதை இது காட்டுகிறது.

- அஸ்டாடின் (At) என்பது அணு எண் 85 மற்றும் 103 நியூட்ரான்களைக் கொண்ட ஒரு கதிரியக்க மற்றும் உப்பீனி தனிமம் ஆகும்.
- இது தனிம வரிசை அட்டவணையில் உள்ள உப்பீனிகள் குடும்பத்தைச் சேர்ந்தது (தொகுதி 17).
- இது அதன் குறுகிய அரை ஆயுட்காலம் காரணமாக இயற்கையாகவே குறிப்பிடத்தக்க அளவில் கிடைக்கப் பெறுவதில்லை என்பதால் புவியில் உள்ள ஓர் அரிதான இயற்கை தனிமமமாகும்.
- இது மிக அரிதான, கனமான மற்றும் தனிமமான அஸ்டாடினில் இருந்து புரோட்டான் உமிழ்வின் முதல் பதிவு செய்யப்பட்ட நிகழ்வு ஆகும்.

## நிக்கலைப் பிரித்தெடுப்பதற்கான புதிய முறை





- ஜெர்மனியில் உள்ள அறிவியல் ஆய்வாளர்கள் நிக்கலைப் பிரித்தெடுப்பதற்கான ஒரு படிநிலையிலான கார்பன் உமிழ்வு இல்லாத முறையை உருவாக்கியுள்ளனர்.
- இந்த முன்மொழியப்பட்ட முறையானது, சுமார் 18% வரையில் அதிக ஆற்றல் திறன் கொண்டதாகவும், நேரடி கார்பன் டை ஆக்சைடு வெளியேற்றத்தை 84% வரையில் குறைக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது.
- தற்போது, ஒரு டன் நிக்கலை உற்பத்தி செய்வதால் தோராயமாக 20 டன் கார்பன் உமிழ்வு மாசு ஏற்படுகிறது.
- 2040 ஆம் ஆண்டிற்குள் நிக்கலுக்கான உலகளாவியத் தேவை இரட்டிப்பாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்தியாவில் மிகவும் குறிப்பாக ஒடிசாவின் சுகிந்தா பகுதியில் கணிசமான நிக்கல் லேட்டரைட் இருப்பு உள்ளது.
- இந்த இருப்புகளில் நிக்கல் ஆனது, 0.4-0.9% நிக்கல் லிமோனைட்டாக உள்ளது.


## ஜெர்மனியின் வெண்டெல்ஸ்டீன் 7-X ஸ்டெல்லரேட்டர்

- ஜெர்மனியில் உள்ள அறிவியல் ஆய்வாளர்கள் அணுக்கரு இணைவு மூலம் வரம்பற்ற அளவிலான ஆற்றலில் ஒரு முக்கிய மைல்கல்லை அடைந்துள்ளனர்.
- வெண்டெல்ஸ்டீன் 7-X உலையைக் கொண்டு, இந்த ஆராய்ச்சியாளர்கள் இணைவுப் பிளாஸ்மாவை சுமார் 43 வினாடிகள் நிலைக்க வைத்து, ஒரு புதிய சாதனையைப் படைத்தனர்.

- இது உலகின் மிகப்பெரியச் செயல்பாட்டு ஸ்டெல்லரேட்டர் (அணுக்கரு இணைவுக் கருவி) ஆகும்.
- இது அதி வெப்பப்படுத்தப்பட்ட பிளாஸ்மாவை கட்டுப்படுத்துவதற்காக சக்தி வாய்ந்த வெளிப்புற காந்தப் புலங்களைப் பயன்படுத்தும் ஒரு வகையான அணுக்கரு இணைவு உலையாகும்.
- ஜப்பானில் தற்போது செயல்பாட்டில் இருந்து நீக்கப்பட்ட JT60U மற்றும் ஐக்கியப் பேரரசில் உள்ள JET ஆகியன வரலாற்று ரீதியாக அணுக்கரு இணைவு சோதனைகளில் முன்னிலை வகித்தன.
- 2023 ஆம் ஆண்டில், "செயற்கை சூரியன்" என்றும் அழைக்கப்படும் சீனாவின் மிகவும் மேம்படுத்தப் பட்ட மீக்கடத்தல் டோகாமாக் வெப்பமாக்கல் அமைப்பு (EAST) ஆனது, பிளாஸ்மாவை 1,000 வினாடிகள் நிலைக்க செய்தது.




## ரெசிலியன்ஸ் திட்டம் - ஜப்பான்




- ஜப்பானில் உள்ள ஐஸ்பேஸ் எனப்படும் தனியார் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட ரெசிலியன்ஸ் எனும் தரையிறங்குக் கலமானது நிலவின் மேற்பரப்பில் மோதி தரை இறங்கியது.

- இது மிதமான வேகத்தில் கலத்தினைத் தரையிறக்குவதற்காக ஐஸ்பேஸ் நிறுவனம் மேற்கொண்ட இரண்டாவது முயற்சியாகும்.
- ஐஸ்பேஸ் நிறுவனத்தின் முதல் தரையியங்குக் கலமான ஹகுடோ-R விண்கலம் 2023 ஆம் ஆண்டில் மோதி தரையிறங்கியது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## நீலகிரியில் அறுகாலிகள்



A species of hexapod recently rediscovered from the Nilgiris after a century


- ஒரு நூற்றாண்டுக்கு முன்பு நீலகிரியில் முதலில் மிக நன்கு விவரிக்கப்பட்ட அறுகாலி (ஹெக்ஸாபாட்) இனம் ஆனது சமீபத்தில் "மீண்டும் கண்டறியப்பட்டுள்ளது".
- பிரான்சு நாட்டினைச் சேர்ந்த அறிவியலாளரான J.R. டென்னிஸ் என்பவர், 1933 ஆம் ஆண்டில் நீலகிரியில் உள்ள கூடலூருக்கு அருகிலுள்ள தேவர்சோலையிலிருந்து ஓர் அரிய வகை ஸ்பிரிங் டெயில் (கொல்லெம்பொல்லா) பூச்சியை அடையாளம் கண்டார்.
- அவர் அதற்கு பாலிஸ்டுரா ஃபிட்சி என்று பெயரிட்டு, பின்னர் 1944 ஆம் ஆண்டில் அதன் பெயரை பாலிஸ்டுரா ஃபிட்சோயிட்ஸ் என்று மாற்றினார்.
- உலகம் முழுவதும் சுமார் 21 இனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தாலும், இந்த இனத்தின் மரபணு தரவு கிடைக்கவில்லை.
- இதுவரை இந்தியாவில் இரண்டு வகையான பாலிஸ்டுரா மட்டுமே பதிவாகியுள்ளது.
- இரண்டாவது வகையானது வங்காளத்தில் பதிவானது என்ற நிலையில் இது யோசி என்பவரால் 1966 ஆம் ஆண்டில் பாலிஸ்டுரா பெங்கால் எனப் பெயரிடப்பட்டது.

## படையடுக்கில் தூசிப் படலங்களை உட்செலுத்துதல் 2025


- படையடுக்கில் தூசிப் படலங்களை உட்செலுத்துதல் (SAI) என்பது பூமியின் படை யடுக்கு மண்டலத்தில் தூசிப் படலங்கள் செலுத்தப்படுவதன் மூலம் மேற்பரப்பை அடையும் சூரிய ஒளியின் அளவைக் குறைப்பதாகும்.
- இந்த SAI ஆனது உயரும் மேற்பரப்பு வெப்பநிலையை எதிர்த்துப் போராட உதவும் ஒரு குளிரூட்டும் விளைவை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1991 ஆம் ஆண்டு பிலிப்பைன்சில் உள்ள பினாட்டுபோ எரிமலை வெடிப்பு போன்ற பெரிய எரிமலை வெடிப்புகளுக்குப் பிறகு காணப்பட்ட இயற்கை குளிரூட்டும்

விளைவுகளை இது பிரதிபலிக்கிறது.

- இந்த வெடிப்பு சல்பேட் படலங்களைப் படையடுக்கு மண்டலத்தில் உட்செலுத்தியது மற்றும் அந்த ஆண்டு உலக வெப்பநிலையைத் தற்காலிகமாக 0.5°C குறைத்தது.
- SAI செயல்முறையின் செயல்திறன் ஆனது 20 கிலோ மீட்டர் அல்லது அதற்கு மேற்பட்ட இடங்களில், மிகவும் குறிப்பாக நிலநடுக்கோட்டிற்கு அண்மைப் பகுதிகளில் இதைச் செயல்படுத்துவதில் கவனம் செலுத்தியுள்ளது.
- வெப்பமயமாதல் மிகவும் அதிகமாக இருக்கும் வெப்பமண்டலங்களை விட துருவப் பகுதிகளில் குளிர்தல் விளைவு அதிகமாக இருக்கும்.
- ஒரு நாடு ஆனது படையடுக்கு மண்டலத்தில் தூசிப் படலங்களை உட்செலுத்தினால், அனைத்து நாடுகளும் அதன் தாக்கத்திற்கு உள்ளாகும் என்பதோடு அது எப்போதும் நல்ல வகையிலான தாக்கமாக மட்டுமே இருக்காது.




## புனேவில் டுகேசியா புனென்சிஸ்




- புனேவின் பாஷன் ஏரியில் டுகேசியா புனென்சிஸ் என்ற புதிய பிளானேரியன் புழு இனம் கண்டறியப்பட்டுள்ளது.
- இது 1983 ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட முதலாவது புதிய பிளானேரியன் இனமாகும்.

- டுகேசியா புனென்சிஸ் குறிப்பிடத்தக்க மீளுருவாக்க திறன்களைக் கொண்டுள்ளது என்பதோடு இது 10-13 நாட்களுக்குள் மீண்டும் வளரும் திறன் கொண்டது.
- இதன் உடல் அளவு 8 மிமீ-12 மிமீ நீளம் கொண்டது.

### ஸ்பதாஸ்பினா நூஹி

- ஸ்பதாஸ்பினா நூஹி என்று பெயரிடப்பட்ட ஒரு பூச்சி இனமானது, மேகாலயாவின் காடுகளில் கண்டறியப்பட்ட அந்துப்பூச்சி குடும்பத்தைச் சேர்ந்தது.
- இது ஒரு புதிய இனமாக அடையாளம் கண்டறியப்பட்டது மட்டுமல்லாமல், முற்றிலும் புதிய இனத்தின் கீழ் வகைப்படுத்தப் பட்டுள்ளது.
- சுற்றுச்சூழல் சார் சுற்றுலா மற்றும் நிலையான மேம்பாட்டினை ஊக்குவிப்பதற்கான அவரது முயற்சிகளை அங்கீகரிக்கும் விதமாக, கேரள மாநில அரசின் சுற்றுலா துறை இயக்குநரான P.B. நூஹ் எனும் இந்திய ஆட்சிப் பணி அதிகாரியைக் கௌரவிக்கும் வகையில் இந்தப் பெயர் வழங்கப்படுகிறது.
- இவை உலகளவில் அறியப்பட்ட 60,000க்கும் மேற்பட்ட உயிரினங்களை உள்ளடக்கிய பெரிய வண்டு குடும்பமான குர்குலியோனிடேயின் ஒரு பகுதியாகும்.




## அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

### உலக செல்வவள அறிக்கை 2025

- அமெரிக்காவின் அதி உயர் நிகரச் சொத்து மதிப்பு கொண்ட தனி நபர்களின் (HNWI) எண்ணிக்கை 7.6% அதிகரித்து 7.9 மில்லியனாக உயர்ந்ததால், அமெரிக்காவில் மேலும் 562,000 மில்லியனர்கள் அதிகரித்துள்ளனர்.
- உலகின் சென்டி-மில்லியனர்களில் 36% பேர் (100 மில்லியன் டாலருக்கும் அதிகமான மதிப்பிலானச் சொத்துக்களைக் கொண்டிருப்பவர்கள்) மற்றும் உலகின் பில்லியனர் நபர்களில் 33% பேர் அமெரிக்காவில் வசிக்கின்றனர்.

- ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் 5.6% வளர்ச்சியுடன் இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய இரு நாடுகளும் சிறப்பான நிலையில் உள்ளன.
- இந்தியாவின் பில்லியனர்கள் எண்ணிக்கை மில்லியனர்களை விட மிகவும் வேகமாக அதிகரித்து வருகின்றது.
- இந்தியாவில் தோராயமாக சுமார் 250 பில்லியனர்கள் உள்ளனர் என்பதோடு இது சீனாவின் 520 பில்லியனர்களுடன் ஒப்பிடும் போது பாதி அளவு மட்டுமே.
- இந்தியாவில்சுமார் 4,290 அதி உயர் நிகரச் சொத்து மதிப்பு கொண்ட தனி நபர்கள் (30 மில்லியன் டாலர்களுக்கு மேலான சொத்துக்கள்) இருந்தனர் என்ற நிலையில் இது சீனாவில் 22,780 ஆகவும், ஜப்பானில் 13,620 ஆகவும் இருந்தது.
- இந்தியாவின் அதி உயர் நிகரச் சொத்து மதிப்பு கொண்ட தனி நபர்களின் (HNWI) எண்ணிக்கையானது 2024 ஆம் ஆண்டில் சுமார் 5.6% அதிகரித்துள்ளது என்பதோடு அவர்களின் ஒட்டு மொத்தச் செல்வ வளமும் 8.8% உயர்ந்துள்ளது என்ற நிலையில் இது சீனா மற்றும் உலகின் சக நாடுகளை விட அதிகமாகும்.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## ICC அமைப்பின் கிரிக்கெட் புகழார மன்றம் 2025 – M.S. தோனி


- சர்வதேச கிரிக்கெட் சபையானது (ICC) ஐந்து ஆடவர் மற்றும் இரண்டு மகளிர் உட்பட ஏழு கிரிக்கெட் வீரர்களை அதன் 2025 ஆம் ஆண்டிற்கான புகழ் மன்றத்தில் (Hall of Fame) சேர்த்தது.
- இந்த ஆண்டு ICC புகழ் மன்றத்தில் M.S. தோனி சேர்க்கப்பட்டுள்ளார் என்ற நிலையில் அவர் இந்த விருதைப் பெற்ற 11வது இந்திய வீரரானார்.
- தோனி இந்தியாவிற்காக சர்வதேசப் போட்டிகளில் 17,266 ரன்கள், 829 ஆட்டமிழப்புகள் மற்றும் அனைத்து வடிவங்களிலும் 538 போட்டிகளில் விளையாடி சாதனை படைத்து

உள்ளார்.

- இந்திய அணித் தலைவராக 2007 ஆம் ஆண்டில் டி20 உலகக் கோப்பைப் போட்டியிலும், 2011 ஆம் ஆண்டில் ஒருநாள் உலகக் கோப்பைப் போட்டியிலும், 2013 ஆம் ஆண்டில் சாம்பியன்ஸ் டிராபி போட்டியிலும் அவர் வெற்றிகளைப் பெற்றுத் தந்தார்.




## R.P.G.V. கோவிந்தன் செட்டியார்



P.S. Chinnadurai
W.C. Member
All India Hind Mazdoor Sabha
15 VCK Lay-out
Trichy Road
COIMBATORE-641 018

Date:- 27.11.85

This is to certify that Sri R.P.G.V. Govindan of Chithode, Periyar Dist. is a freedom fighter and was sentenced for his participation in the individual Satyagraha and that he went underground during the quit India movement in the year 1942 for more than six months. He has been a staench Congress man and deserves Central Govt. Pension for Freedom Fighter.

Sd/- x x P.S. Chinnadurai
(Freedom Fighter, Sentenced for life imprisonment).

True copy
16.11.81
JUNIOR ENGINEER / O&M / WEST
Periyar Electricity Distribution Circle
CHITTODE-638 102.


- R.P.G.V. கோவிந்தன் செட்டியார் முன்பு ஒருங்கிணைந்த கோயம்புத்தூர் மாவட்டத்தின் ஒரு பகுதியாக இருந்த ஈரோடு தாலுக்காவில் உள்ள சித்தோடு என்ற ஒரு கிராமத்தில் பிறந்தார்.
- பள்ளி மாணவராக இருந்தபோதும், 1920–21 ஆம் ஆண்டு ஒத்துழையாமை இயக்கத்தில் அவர் பங்கேற்றார்.
- 1941 ஆம் ஆண்டு பிப்ரவரி 28 ஆம் தேதியன்று, சித்தோடு மாரியம்மன் கோயில் அருகே ஒரு சத்தியாக்கிரகத்தை அவர் வழி நடத்தி, நமது நாட்டின் சுதந்திரத்திற்கான தனது அசைக்க முடியாத அர்ப்பணிப்பை வெளிப்படுத்தினார்.
- 1941 ஆம் ஆண்டு பிப்ரவரி 02 மற்றும் மார்ச் 09 ஆகிய தேதி வரையிலான காலத்தில், அவர் ஒரு பாத யாத்திரையை மேற்கொண்டு ஆங்கிலேயக் காலனித்துவ ஆட்சிக்கு எதிராக பொதுமக்கள் முன்னிலையில் சொற்பொழிவு ஆற்றினார்.
- அவர் 1941 ஆம் ஆண்டு தனிநபர் சத்தியாக்கிரக இயக்கத்திலும் மிகவும் தீவிரமாகப் பங்கேற்றார்.

- நாட்டின் சுதந்திரத்திற்குப் பிறகு, அவர் ஈரோடு தேசிய விரிவாக்கத் திட்டத்திற்கான ஆலோசனைக் குழுவின் உறுப்பினராகப் பணியாற்றினார்.

# விளையாட்டுச் செய்திகள்

## டெண்டுல்கர்-ஆண்டர்சன் கோப்பை

- இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் வாரியம் (ECB) மற்றும் BCCI ஆகியவை ஜேம்ஸ் ஆண்டர்சன் மற்றும் சச்சின் டெண்டுல்கர் ஆகியோரின் பெயர்களை சில குறிப்பிட்டக் கோப்பைகளுக்கு வழங்க முடிவு செய்துள்ளன.
- இங்கிலாந்தில் நடைபெறும் போது இந்தப் போட்டிகள் பட்டோடி கோப்பை என்றும் இந்தியாவில் நடைபெறும் போது அந்தோணி டி மெல்லோ கோப்பை என்றும் அவை அழைக்கப் பட்டன.
- ஜேம்ஸ் ஆண்டர்சன் 704 விக்கெட்டுகளுடன் மிகவும் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய இங்கிலாந்தின் முன்னணி வீரராக உள்ளார்.
- சச்சின் டெண்டுல்கர் டெஸ்ட் போட்டிகளில் 15,921 ரன்களை எடுத்து மிக அதிக ரன்கள் எடுத்தவர் என்ற பெருமையினைக் கொண்டுள்ளார்.





# இதரச் செய்திகள்

## 800 ஆண்டுகள் பழமையான சிவன் கோயில்

- மேலூர் தாலுக்காவில் உள்ள ஊடம்பட்டி என்ற கிராமத்தில், சுமார் 800 ஆண்டுகள் பழமையான பாண்டியர் காலத்தைச் சேர்ந்த ஒரு சிவன் கோயில் அகழ்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

- கல் தளத்தின் மீது பதிக்கப்பட்ட இரண்டு தமிழ்க் கல்வெட்டுகள், கி.பி 1217-1218 ஆம் ஆண்டு காலத்தை அதாவது மாறவர்மன் சுந்தர பாண்டியனின் ஆட்சிக் காலத்தினைச் சேர்ந்தவை என்பதை எடுத்துரைக்கின்றன.
- இந்தக் கல்வெட்டுகளின் படி, அந்தக் கிராமத்தின் பெயர் ஆத்தூர் என்றும், கோயில் தென்னவனீஸ்வரம் என்றும் அழைக்கப்பட்டதாக தெரிகிறது.
- இந்தக் கல்வெட்டுகள், களவாளி நாட்டின் தலைவரான அழகப்பெருமாள் காங்கேயன் என்றழைக்கப்பட்ட நம்பி பெரம்பல குத்தன் என்பவரிடம் ஒரு நீர்நிலையை விற்பனை செய்ததற்கான பத்திரத்தைக் குறிக்கின்றன.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★